றனர். அரச பள்ளிக்கூட ஆசிரியர்களைப் பொறுத்தளவில் ஆகக்குறைந்த கூலிகளின் அதிகரிப்பு 5 7 சதவீதமாகவிருந்தது. தனியார்துறையில் கூலிகளின் சதவீத அதிகரிப்பு ஓரளவு குறைவாகவிருந்தது. பெருந்தோட்டங்களில் தொழிலாளர்களது பெயரளவிலான கூலிகள் 2.16 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் கைத்தொழில்களிலும் வர்த்தகத்திலுமுள்ள தொழிலாளர்களது கூலிகள் 2.58 சதவீதத்தினுல் அதிகரித்தன. இவ்வாண்டில் நம்பத்தக்க நுகர்வோர் விலைக் குறிகாட்டி அற்றநிலையில், உண்மைக்கூலிகளின் மாற்றங்களினை மதிப்பிட முடியாமலுள்ளது. உள்ளடக்க விலைக்குறிகாட்டி ஒரு எடுத்துக்காட்டாக அமையின் 1976இல் உண்மைக்கூலிவீதங்கள் பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளன என்றே கூறல்வேண்டும்.

## தொழில் நிலை

இலங்கையில், தொழில்நிலையும் தொழில் இன்மையும் மீதான எல்லாவற்றையும் உள்ளடக்கிய புள்ளிவிபரங்கள் குடிமதிப்பிலிருந்தும் ஒழுங்கற்ற இடைவெளிகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடாத்தப்பட்ட அளவீடுகளில் இருந்தும் பெறப்படுகின்றன. இவ்வளவீடுகளுள் பலவற்றில் தொழில் பற்றி பெற்ற தரவுகள் தற்செயலானவையாகும். இம்மூலங்களிலிருந்து பெறப்பட்ட தரவுகள் பற்றிய வரையறை வேறுபடுவதனுல் இவற்றைச் சரியான முறையில் ஒப்பிடமுடியாது மேலும், அவ்வாருன தரவுகள் தொடர்ச்சியான அவதானிப்புக்களுக்கு உட்படும்முறையில் அடிக்கடி பெறக்கூடிய நிலையில் இல்லை. எனவே தொழில்பற்றியும், தொழில் இன்மை பற்றியதுமான 1976இன் போக்குகள் பொதுவானநிலையில் மட்டுமே ஆராயத்தக்கதாக உள்ளன. வேலையின்மையைப் பொறுத்தளவில், அதன் அளவு தெளிவாகத் தெரிவதனுல், அதன் மதிப்பீடுகளை ஒட்டி ஏற்படும் தவறுகள் அதன் அடிப்படைப் போக்கினை மாற்றப்போவதில்லை.

1971இன் குடிமதிப்புத்தரவில், முதலெடுப்பாக 10சதவீத மாதிரிக்கணிப்பினை எடுத்துப்பார்க்கின் 44 இலட்சம் ஆட்களைக்கொண்ட ஒரு தொழிற்படை உள்ளதென்பது தெரியவருகிறது 1973இன் முற்பகுதியில் மத்திய வங்கியினுல் நடாத்தப்பட்ட நுகர்வோர் நிதி அளவீட்டின்படி மதிப்பிடப்பட்ட தொழிற்படை இவ்வெண்தொகையினைவிட ஓரளவே அதிகமானதாகக் காணப்பட்டது. அதேவேளையில் குடிமதிப்புக் கணிப்பின்படி 1971இல் வேலையற்ருேர் எண்ணிக்கை 8 இலட்சமாகவும், 1973க்கான நுகர்வு நிதி மதிப்பீட்டின்படி 10 இலட்சமாகவும் இருந்தது. குடித்தொகையின் வயது அமைப்பையும் வயதுப்படியான தொழிற்பாட்டு வீதங்களையும் எடுத்துநோக்கின் 1976இல் தொழிற்படையில் ஏறக்குறைய 125,000 இளைஞர்கள் சேர்ந்திருக்கையில் ஏறக்குறைய 20,000 பேர் விட்டுவிலகியுள்ளனர் என்பதனை எடுத்துக்காட்டுகிறது. இவ்வெண்தொகைகள் 100,000க்கு மேற்பட்ட புதிய தொழிலுக்கான கேள்வியை உள்ளடக்கத்தக்கதாக இருந்தன.

அரசதுறையின் தொழில்பற்றிய வங்கியினது 1976இன் ஆண்டு அளவீட்டுப்படி அரச திணைக்களங்களிலுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை 4.6 சதவீதத்தால் அல்லது ஏறக்குறைய 20,000 பேர்களால் அதிகரித்துள்ளது. அரசினுல் உருவாக்கப்பட்ட புதிய தொழில்களில் அரைவாசிக்கு சிறிது மேற்பட்ட தொகை ஆசிரியத்தொழிலிலேயே அமைந்திருந்தது. அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தில் ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையே அரசுசார் நிறுவனங்களில் (அரச கூட்டுத்தாபனங்கள் பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறு

25785

வனங்கள், நியதிச்சபைகள் போன்ற.) 55,000க்கு மேற்பட்ட தொகையால் அதிகரிப்பதற்குப் பெருமளவு காரணமாக அமைந்தது. இவ்வாண்டில் அதன் முகாமையின் கீழ்கொண்டுவரப்பட்ட பெருந்தோட்ட நிலப்பரப்பு விகிதாசார அடிப்படையில் ஒப்புநோக்குகையில் ஊழியர்களின் அதிகரிப்பு எண்ணிக்கையை விட அதிகமானதாகும். எனவே 55,000 பேரைக்கொண்ட இவ்வதிகரிப்பு எனத் தோன்றியபோதும் தனியார்துறையில் இருந்து அரசுசார் துறைக்கு ஊழியர்கள் மாறிச்சென்றமையையே இது காட்டுகின்றது.

புதிய அமைப்பு வடிவங்களூடாக தொழில் வாய்ப்பினை அதிகரிக்கும் நோக்குடன் தொழிலாளர் எண்ணிக்கையைக் கூட்டி உற்பத்தியைப் பெருக்கும் வழிமுறைகள் பல எடுக்கப்பட்டுள்ளன. கூட்டுறவுப்பண்ணைகள் சிறப்பாக மக்கள் குடியிருப்புக்களும் (ஜனவாச) மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் செயற்றிட்டங்களுமே இவ்வகையில் முதன்மையானவையாகும். மாவட்ட அபிவிருத்திச் சபைகள் 1976 செத்தெம்பர் இறுதியில் 20,457 பேர்களுக்கு வேலைவாய்ப்பளித்ததுடன் அவற்றில் மேலதிக வேலைகளின் எண்ணிக்கை, 1976இன் முதல் 9 மாதங்களில் 10,658 ஆக இருந்தது. 1976 இறுதியில் மக்கள் குடியிருப்புக்கள் (ஜனவாச) 20,000 பேருக்கு வேலைவாய்ப்பளித்ததுடன் இவ்வாண்டுக் காலப்பகுதியில் வேலைக்கமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை ஏறக்குறைய 2,000 ஆல் அதிகரித்தது.

தனியார்துறையில் வேலைவாய்ப்புக்கள் பற்றிய போதிய தரவுகள் இல்லாத நிலையில், நிறுவன அமைப்புடைய தனியார்துறையில் வேலைவாய்ப்பிலேற்பட்ட ஆண்டுக்குரிய மாற்றங்களை அளவிடுவதற்காக ஊழியர்சேமநிதியில் தொழிற்படும் கணக்குகளின் எண்ணிக்கை கணிப்பிற்கு எடுக்கப்பட்டன. பெருந்தோட்டத்துறையில் 20,980 கணக்குகள் வீழ்ச்சியுற்றதினாலும் பெருந்தோட்டத்துறை அல்லாத துறையில் 6,703 கணக்குகள் அதிகரித்தமையினாலும் 1976இல் இக்கணக்குகளின் எண்ணிக்கை 14,277 ஆக அல்லது 1.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. பெருந்தோட்டங்களின் வேலைவாய்ப்பிலேற்பட்ட வீழ்ச்சிக்கு இந்தியத்தொழிலாளர்கள் மீள அனுப்பப்பட்டதே காரணமாகும். வேலைநாட்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன்வாயிலாக தோட்டங்களிலிருந்து தொழிலாளர்கள் வெளியேறுவதால் ஏற்பட்ட பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன. பெருந்தோட்டத்துறையின் தொழில் நிலையில் ஏற்பட்ட வீழ்ச்சியைத் தவிர்ப்பின் அரசதுறை, மக்கள் குடியிருப்புக்கள் (ஜனவாச) மாவட்ட அபிவிருத்திச் சபைகள், ஒழுங்காக அமைக்கப்பெற்ற தனியார்துறை ஆகியவற்றின் புதிய தொழில்நிலை ஏறக்குறைய 40,000 ஆக இருக்கும். எனினும் இவ் எண்தொகை நிறுவனமற்ற தனியார் துறையினுலும், உள்நாட்டு வேளாண்மைத் துறையினுலும் ஏற்படுத்தப்பட்ட தொழில் நிலையையும் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தினல் உருவாக்கப்பட்ட தொழில் நிலையையும் உள்ளடக்கமாட்டாது.

## வெளிநாட்டு வர்த்தகமும் சென்மதி நிலுவையும்

### வெளிநாட்டு வர்த்தகம்

1966 தொடங்கி இலங்கையின் வர்த்தக நிலுவை தொடர்ந்து குறைந்து விளங்கி 1974, 75இலும் முறையே ரூ. 10,820 இலட்சமாகவும் ரூ. 13,180 இலட்சமாகவும் மிக உயர்மட்டக் குறையைப் பதிவுசெய்தது. சுங்கத்தரவின் அடிப்படையில் பார்க்கையில் இப்போக்கு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். காரணம், 1976இல் ரூ 1,270 இலட்சம்கொண்ட மிகையை